
# அரசியல் ...
# வா/ வியா-திகள்?
# (கவிதய்கள்)

- ஈவெராதாசன் -
கண்டி எம்.ராமச்சந்ரன்
(ஆர். முத்துக்கருப்பன்)

***

கய்தேர்ந்த திருடன்
பாராளுமன்றம் செல்கிறான்!
கத்துக் குட்டித் திருடன்
சிறய்ச்சாலய் செல்கிறான்!
- ஜோர்ஜ் பர்நாட் ஷா -

(1856.07.26 ↔ 02.11.1950)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் ... வா/வியா-திகள்?
# (கவிதய்கள்)

- ஈவெராதாசன் -
கண்டி எம். ராமச்சந்ரன்
(ஆர். முத்துக்கருப்பன்)
***

# Politicos ?
# (Poetry)

- Eeveraadhaasan-
Kandy M. Raamachandhran
(R. Muthucarupan)
***

# දේශපාලකයෝ?
# (කවි)

-ඊවෙරාදාසන්-
කන්ඩි එම්. රාමචන්ද්‍රන්
(ආර්. මුත්තුකරුපන්)
***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னர் வெளியிட்ட நூல்கள் - Bibilography :-

1. விடிவை நோக்கி - கவிதைகள் - 1987
2. கவிதை - கவிதைகள் - 1987
3. சிறுவர்மாலை - பாடல்கள் - 1993 - 2004
4. தேயிலைத் தோட்ட - மக்கள் பாடல்கள் -1996
5. இடைவெளி - குறுநாடகங்கள் - 1997
6. தமிழ் எழுத்து சீர்திருத்தம் - 1998
7. சிங்கள எழுத்து சீர்திருத்தம் - 1998
8. சிறுவர் இலக்கியச் சிந்தனைப் பாடல்கள் - 2001
9. சிறுவர் இலக்கியம் - இசைக் கவிதைகள் - 2001
10. சிறுவர் பாடல்கள் - 2002
11. දේශපාලන /වව - කවි - 2003 - 2012
12. Politics /Poly Tricks - songs - 2003
13. மரபுக் கவிதை எழுத.... - 2003
14. சிறுவர் சிந்தனைக்கு - பாடல்கள் - 2003
15. தேயிலைத் தோட்ட மக்கள்- சிந்தனைப் பாடல்கள் - 2004 - 2010
16. சிறுவர் விழிப்புணர்சசிப் பாடல்கள் - 2004
17. தேர்தல்- கவிதைகள் - 2004
18. மக்கள் இலக்கியம் - இசைக் கவிதைகள் - 2004
19. கதம்பம் (புதுக் / இசைக்/ மரபுக்- கவிதைகள்) - 2004
20. புரட்சிக் - கவிதைகள் - 2004
21. குறும்பா, சய்னீஸ், ஹைக்கு, வெண்பா - 2005
22. கூட்டத்தில் கூடி நின்று - சிறுகதைகள் - 2005

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. மலய்யாண்டி - குறு நாடகங்கள் - 2005
24. மக்கள்- இலக்கியக் - கவிதய்கள் - 2005
25. மக்கள் கலய் இலக்கியம் - கவிதய்கள் - 2005
26. வெற்றி - கவிதய்கள் - 2005
27. பாரதியார்? - கவிதய்கள் - 2005
28. தாயுள்ளம்- சிறுவர் பாடல்கள் - 2006
29. பாரம்பரியம்- பல்லினக் கவிதய்கள் - 2006
30. பற்று- கவிதய்கள் - 2007
31. அந்தநாள் - கவிதய்கள் - 2007
32. நிவேதித்தா- கவிதய்கள் - 2007
33. அன்னய் திரேசா- கவிதய்கள் - 2008
34. சிந்தனய்த் துளிகள்- கதம்பம் - 2008
35. பாரதிக்குச் சமமான - கவிதய்கள் - 2008
36. இருபுறம் - கவிதய்கள் - 2009
37. (தடு)மாற்றம்- கவிதய்கள் - 2009
38. மண் வாசனய் - கவிதய்கள் - 2009
39. புதய்யல்- கவிதய்கள் - 2009
40. எதிர்மறய்- கவிதய்கள் - 2010
41. மரபுக் கவிதய்க்கு மார்க்கம் - 2010
42. கன்னத்தில் முத்தமிட்டால்- கவிதய்கள் - 2010
43. ஆதங்கம் - இசய்க் கவிதய்கள் - 2011
44. சிந்தனய்க்கு- கவிதய்கள் - 2011
45. தேயிலய்த் தோட்ட - மக்கள் கவிதய்கள் - 2011
46. அப(வ்)த்த - பாடல்கள் - 2011
47. (எ/பு)திரும் - கவிதய்கள் - 2011
48. வ/த - ர்க்கம் - கவிதய்கள் - 2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

49. சிறுவர்க்கு- பாடல்கள் - 2012

50. விமர்சனம்- ஹய்க்கூ - 2012

51. இளய்ஞர்- பாடல்கள் - 2012

52. வெளிச்சம் - கவிதய்கள் - 2013

53. விழிப்புணர்ச்சி - கவிதய்கள் - 2013

54. ந - ல/லி -வா? - கவிதய்கள் - 2014

55. பகுத்தறிவு - கவிதய்கள் - 2014

56. தத்துவமும் நடய் முறய்யும் ? - கவிதய்கள் - 2014

57. மே - "டேய்"/ டய் - கவிதய்கள் - 2015

58. மரபுக் கவிதய்க்கு ... - 2015

59. இளய்ஞர் யுவதிகளுக்கு - கவிதய்கள் - 2016

சஞ்சிகய் : கவிதய் - 1997...


---

# 60. அரசியல்...வா/வியா-திகள்?
## (கவிதய்கள்)


- ஈவெராதாசன் -

கண்டி. மு. ராமச்சந்ரன்

(ரா. முத்துக்கருப்பன்)





முதல்பதிப்பு : 2016 - 07 - 05

வெளியீடு : 2016 - 08 - 10

வெளியிடுபவர் : M. Raamachandhran
RAAMACHANDHRAAS
#. 2/1, Riverdale Junction
Aniwaththa, Kandy- 20,000
SHRI LANKA - 0094

ஆக்கங்கள் : 52


பக்கங்கள் : 72 + 04 = 76

பிரதி விலய் : ரூ. 250/=



01. அரசியல் வா/வியா-திகள்?↔52. தேசிய கீதம் ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 01. அரசியல்...வா/வியா-திகள்?




★ யானைக் கட்சிகளில்
அரசியல் நடத்த வந்தோரில்
சில மந்திரி அமைச்சர் ...



பூனைக் கட்சியில்
அரசியல் நடத்த வந்தார்!

★ பூனைக் கட்சியில் இருந்து
சிலர் பிரிந்து சென்றே ...



புலிக் கட்சியைக் ஏற்படுத்தி
அரசியல் நடத்த வந்தார்!

★ புலிக் கட்சியில் இருந்து
சிலர் பிரிந்து சென்றே ...



எலிக் கட்சியைக் ஏற்படுத்திக்
கிளி பிடிக்க வந்தார்!

★ எல்லா நரிக் கட்சிகளுக்கும்
68-வருடங்களாக
வாக்குச் சாவடிக்குச் சென்றே
தொடர்ந்து வாக்களித்தே ...
நாட்டு மக்களோ ...
செம்மறி ஆடுகளானார்!





சனநாயக அக சோசலிசக்
குடிகுடு அரசு என்ற
சுதியான பெயர் மட்டும் ...
கொடி கட்டிக் பறப்பே?
(Politicos)

❋❋❋

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 02. தேர்தல்...?




★ வாக்குறுதிகளய் மட்டும்
வாய் நிறய்யத்
துப்பும் வள்ளல்களே ...

தேர்தலில் போட்டியிட்டு
ஜெயிக்க வந்த
வேட்பாளர் (அ) சிங்கங்களே!

★ ஆசய் வார்த்தய்களய் மட்டும்
அடுக்கடுக்காய்க் கேட்டே ...

காது மட்டும் குளிர்ந்தோரே
வாக்காளர் பெரும் ம(ா)க்களே!

★ வயிற்றுக்கு மட்டும்
போதிய உணவு இன்றி
வயிறு காய்ந்தோரே
வக்கிரப் பெருமக்களே!




★ "செவிக் குணவு
இல்லாத போதே ...

சிறிது
வயிற்றுக்கு ஈயப்படும்."
எனும் பழம் மொழியய்ச்
சரிஎன நிறுவவே தாம்
அரசியல் வா/வியா-திகளின் ...
தனிப்பெரும் முயற்சீ?
(Electioneering)

❋❋❋

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 03. தேர்தல்!



★ தேர்தல் முடிந்தும்
முடியாதது மாகத்
தெரு வெளிஎல்லாம்
தீப்பற்றி எரிகின்றன!

★ மருத்துவ மனய்களில் - தலய்
மண்டய் உடய்ந்தோர்
கய்கால் முறிந்தோர்
நிறய்த்து கிடக்கின்றனர்!

★ எரி காயங்களுடன்
இறந்த சடலங்களும் - வீதியில்
சிதறிக் கிடக்கின்றன!

★ ஆனால் - பொதுத்
தேர்தல் அபேட்சகர்களாக
முன் வந்து வென்றோரும்
தோற்றோரும் - ஒரே ...

அய்ந்து நட்சத்திர
"டுவரிஸ்ட் ஓட்டல்களில்"
ஒன்று கூடி வெளிநாட்டு ...

"விஸ்க்கி , பிரெண்டி
ஜின்" மதுவருந்தி
மகிழ்ச்சிக் கொண்டாட்டமே?



★ வாக்காளர்கள் உள்நாட்டு ...
கள்ளுச் சாறாயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கசிப்பு "குடு" வுடன்
காசு பணம் - கய்
லஞ்சம் பெற்றே ...

குதித்துக் கூத்தாடும்
புண்ணிய காலமும்
தேர்தல் க(ா)லமே?

★ சனநாய் அகப்
புனித அமய்ப்பய்த்
தூய்மய்யாகப் பேணிப்
பாதுகாப்போர் - புனிதக் ...

கய்க் கூலிகளான
காடய்யர் கடய்யரும்
பாதாள கோஷ்டியினரே!

★ தேர்தல் கூத்தூ
முடிவடய்ந்த பின்னரும்
ஆளும் கட்சிக்கு
ஆதரவாக நாட்டுக்குள்
"குடு" கடத்தல் பகிர்வு ...



மர்மக் கொலய்
கொள்ளய்களய்
முன்னெடுத்துச் செல்வோர்
காடய்யர் கய்க்கூலிகளே?

(Hustings)

❋❋❋

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 04. எப்படிக் "குடு"?

★ மது போதயக்
"குடுத்" தூளுடன் - நாட்டில்
கய்யும் மெய்யுமாகப்
பிடிக்கப் பட்ட - புனித
"குடு கடத்தல்" மன்னனின்
"பொலிஸ் பதிவுகள் எல்லாம்
கடத்தப் பட்டாமே?

★ மது போதய் தூலய்
வெளி நாட்டில் இருந்தே
கொள்கலனில்
கொண்டுவந்த பிரபல
அரசியல் பெரும்புள்ளியின் ...



அடய்யாளம் முழுதும்
பொலிசாரால் - கணித
மகுடிப் பாதுகாப்பாமே?

★ மா மனிதரய்க்
குற்றஞ் சாட்டிய ...

அத்தனய் மனிதரும்
மர்மக் குற்றவாளிகளே!

★ கசிப்புக் குடியய்க்
களவில் காச்சிய - நாட்டுக்
களூ பண்டாவுக்கு
அய்யோ! பாவமே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆறு ஏழு மாதக்
கடூழியச் சிறய்வாசப்
புனிதத் தண்டனய்யே?

(Whither Police Duty)

❋❋❋

## 05. க/கா- ட்சீ...?

★ புதுப்புதிர் அரசியல் கட்சிகள்
புற்றீசல் போல்பெருகி
அதம்வதம் தாமே நாட்டில்
ஆனந்தக் கூத்தாடி ...
அதிகரிப்பு அட்டகாசம் !

★ தொழிலாளர் விவசாயிகள்
தோழர்என முன்வந்தோர் ...
மொழிஇன மதசா திபேத
முக்காடு மூடிய ...
இழிசினர் தாமானார்?



★ வாக்களித்த மக்கள்தமய்
மாக்கள் என மதித்தேதாம் ...

வக்கிர மதபோ தகரின்
காலடி வீழ்ந்து வணங்கும்
கயவர்கள் தலய்வர்களே!

மாக்சிசம் பேசிநடித்த
வக்கிரத் தோழர்களும் (Comrades)
சார்பே அவர்களுடன் ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"சயவேவா" கோசமிட்டே
சந்தி சிரிப்புக் காணார்?

★ இனமத மொழிப்பிரதேச
விரிசல் விதய்க்கும் ...

இழிசினரய்ப் புறந்தள்ளி
சனம் திரண்டு முன்
வரும் வரய்யில் - நாட்டில்
சாக்கடய் அரசு ஆட்சி
சாஸ்வதத் தொடர்நாடகமே?

(Politics/ Poly Tricks)

❋❋❋

## 06. மே - "டே"/ டய்?



★ மேதினக் கூட்டம் போட்டு
மேடய் மேல் ஏ றிநிண்ணூ...

காதினிக் கப்பே சுதற்கே
கட்சீத் தலய்வர் மாரு
மோதிமுட் டீவா ராகடீ!
முன்னே வந்துபா ருங்கடீ!

★ கார்ல்ஸ்மார்க்ஸ் ஏங்கல்ஸ் படத்தே
தோள்மேல் சுமப்ப தற்கும்
நாலுதொ ழிலாளரே அமர்த்தீ
நாயா நடக்கவய்ப் பதோடு ...

காளுகா ளுண்ணுக ழுதய்யா
கத்தகா டயரும் ரெடிடீ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ "சம்பளத் தேக்கூட் டிப்பெற
சண்டய் புடிப்போ "முண்ணூா...
வம்பளப் பும்தொட ருவாக
வாய்கிழி யக்கத் தியேதாம்
"கம்ஓ கோ! சிக் காகோ?"
கய்யுயர்த் தீநடிப் பாகடீ!

★ "காணியே சொந்தமாகத் தந்து
கட்டா யம்அதில் வீடுக
கட்டிக் கய்யில் தருவோம்!" எனக் ...

கடய்வா யில்வா ணிவடியக்
கோணிக் கூனியே கத்தீ ...
குதிச்சுமே தாம்நாடிப் பாகடீ?



★ தொழிலா ளரின்முது கிலேறி
தொடராய்க் காதேக் கடிச்சீ
விழிபிதுங் கவய்ச்சது தாமே...

விகார மேபல ஆண்டுக!

விழிப்புநாம் பெறாத வரய்யில்
விடிவே எமக்கில் லேடீ!

★ பாட்டா ளிமக்கள் ஆட்சிப்
பக்குவம் காணும் வரய்யில்
காட்டிக் குடுப்புட னேதாம்
கழுத்தறுப் புடனே தொடராய் ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ஓட்டுப்” போட்டுப் போட்டே
உருப்படா மேபோ வோமடி?

★ கட்சி அரசி யலாலே
காடய் யர்தாம் பெருகியே ...

குட்டிச் சுவரா கிநாடே
“குடுகுடி” அரசாட் சியேதாம்!
முட்டிநாம் ஓடய்சி ஒழிச்சீ
முடிவு காண்பதெப் போடீ?
(Whither May day)

❋❋❋

## 07. ர/சி - த்தம்? (1886)

★ அமெரிக்க
சிக்காகோ ந-கரி/ரகி-ல்
அன்று தொழிலாளர்
சிந்திய சிவப்பு ரத்தம் ...
உலகம் முழுவதுமே
விரிந்து பரவியதே தாம்
மே தினக் கீர்த்தியாமே!




(Whither May Day - 01.05.1886

✷ எமது பவ்த்த சிங்களச்
சிரிலங்கா நாட்டில்
பவ்த்த, இஸ்லாம்
மதக் கலவரத்திலும் ...

★ சிங்கள தமிழ்
இனக் கலவரங்களிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் சிந்திய
சிவப்பு ரத்த ஆற்றில் ...

மே தின ரத்தத் துளி
மூழ்கடிக்கப் பட்டாமோ?

★ எதற்கும் - நாம் நமது
நாட்டில் அரசியல்
பகடய் ஆடியே
ஆண்ட / ஆழும் ...

தேச / சேத பிதாக்களிடம்
கேட்டு நாம் ஆம்!
முழு விவரத்தய்யும்
தெரிந்து கொள்வோமா?

(Whither Bloodshed)

✵✵✵

## 08. கு-டி/டு அரசூ?

★ உண்மய் நேர்மய்
ஒழுக்க மெல்லாம்
உதவாக் கரய்யாக
உதவல் தாமே ...

சனநாய் அகமாம்
சாக்கடய் யாமே!

★ சட்டம் நீதி
ஒழுங்கய் எல்லாம்
தட்டுக் கெட்டே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீரழிந் திடவே
முற்றும் உதவவே
சோசலிச மாமே?



★ அத்தனயக் கும்அநு
சரணய் யாக
லஞ்சம் ஊழல்
மோசடி களுடனே ...

குடுகுடி கூடா
ஒழுக்கத் துடனே ...

கொலய்கொள் ளய்யுமே
கூட்டுச் சேர்வே ...

குட்டிச் சுவராம்
குடிஅர சாமே?



★ சோச லிசகோ
சமிட்டே சிவப்புச்
சட்டய் அணிந்த
தோழர் களுமே (Comrades)
மோசடி களுக்கே
உடந்தய் என்றே
முகமூ டிமுற்றும்
கிழிந்தே தாமே?

(Whither Democratic Socialist
Republic of Shri LANKA)

❋❋❋

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 09. வரும் மானம்?

★ கள்ளச் சாறா
யம்பியர் கள்ளு
கசிப்பு எதனோல்
குடிவகைய் வடிக்கவும் ...

விற்கவும் குடிக்கவும்
அனுமதிப் பத்திரம்
அமோகமாய் வழங்கி
ஆதரிப் பதுடனே ...



★ கஞ்சாச் செடிதோட்
டக்கா டுகளய் ...

காடு மேடு
பள்ளம் எங்கும்
மிஞ்ச வளர்கவும்
அனுமதித் தாலோ ...

மிதமிஞ் சிநாடு
கெட்டா லுமென்ன!

★ நாட்டு வரியாம்
வருமா னமேதாம் ...

மேட்டுக் குமேலும்
உயர்ந்தே ஓங்கி
நாட்டு ஆட்சிக்
குதவு மன்றோ ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாரா ளுமன்ற
நாடாளும் ... புனித
மந்திரி தந்திரி
அமய்சர்களே?

(National Revenue Booster)

❋❋❋

## 10. மொழிப்பற்று?

★ சிங்களம் தமிழ்
மொழி உரிமய்யக்காக
உயிரய் விடவும்
ரெடியாக இருப்பதாக ...

நாடகம் ஆடிய
நமது சுந்தரச்
சிரிலங்கா நாட்டு
சிங்களத், தமிழ், முஸ்லீம்
அரசியல் தலய்வர்களின்
மனய்வி மக்கள் ...



சொந்த பந்த
சுற்றத் தார்கள் ...

அய்ரோப்பா, அமெரிக்கா
ஒஸ்ட்ரேலியா சென்று ...

உல்லாச சல்லாப
வாழ்க்கய் வாழ்வது ...
அங்கெல்லாம் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந்தரத் தமிழயும்
இங்கித சிங்களத்தய்யும்
சீரும் சிறப்புமாகப்
பேணிப் பாதுகாக்கவோ ?

★ இங்கே சூறய்யாடிய
தேசிய வருமானத்தய் ...

அங்கெல்லாம் கடத்திப்
புனிதமாகப் பாதுகாக்கும்
சிங்களத் தமிழ் பற்று
முகமூடியே?

(Embezzlement of State Revenue)

❋❋❋

## 11. நாடகமே?




★ கார்ல்மார்க்ஸ் ஏங்கல்ஸ்
லெனின் ஸ்டாலின் போல ...

மாவோ சேதுங் சேகுவேரா போல ...
தலய்மயிர் தாடி மீசய்
காடு வளர்ப்பதுடன், மாவோ
சேதுங் போல முகமயிரய் ...




மொட்டய்யாய் வழித்துக் காட்டிய
கேடிகளய் எல்லாம் தாம்
தமக்கு முற்போக்கு நேர்
நல்வழி காட்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தோழர்களே என நம்பி (Comrades)
ஏமாந்து தவித்தலய்வோரே ...



நமது சீனக் காட்டுத்
தேயிலயத் தோட்டக்
காடு வளர்க்கும் கூலித்
தொழிலாளரும் ....


கிராம நாட்டு வயல்
காட்டு விவசாயிகளுமே!



★ 68 - வருடங்களாகக்
கிழந் தமிழ் சிங்களத்
தலய்வர் பலரய் நம்பியே
நேர்வழி காணாத
தொழிலாளர் விவசாயிகட்கு ...

★ இளய்ஞர் யுவதிகளே
ஒன்று கூடிப் புது
நேர்வழி காட்டிவிடக்
கூடாது என்ற
வக்கிர நோக்கத்தாலே ...

★ சாதி இனமத
மொழிப் பிரதேசப்
பிரிவினய் விரிசலய்
எங்கும் விதய்த்தே ...
நாட்டய்ச் சிதய்க்கவே



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

60. அரசியல்...வா/வ
(கவிதய்கள்)

புதுப்புதிர் தொழிற்
சங்கங்கள், அரசியற்
கட்சிக் கடய்கள்
சதிச் சதிர் நாடகமோ?

(Wicked Dramas)

❋ ❋ ❋

## 12. ெ-ம/பா - ய்யா?

★ குருடர் செவிடர்
ஊமய்யர் பாடசாலக்கு
அரசியல் கட்சிகளின்
அத்தனய் தலய்வர்களும் ...

தோல்வியுற்ற வென்ற
வேட்பாளர்கள் என்ற
வேறுபாடு இன்றியே ...

மோட்டார் வாகனங்களில்
கொடி கட்டிக் காட்டிப்
பறந்து வருகிறார்களே?

★ குருட்டுச் செவிட்டு
ஊமய்க் குழந்தய்களின்
தலய்யய்த்தடாவிக் கொஞ்சி
அவர்களய்க் காண வந்த
அத்தனய் வாக்காளர் ...

தாய் தந்தய் சுற்றத்தாரின்
சுக துக்கங்களய்யும்





முதல் பதிப்பு : 05.07.2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




குசலம் விசாரிப்பதன்
குட்டு என்னவோ?

★ ஆட்சி அதிகாரத்தய்
அவர்களின் நல்ல
கள்ள ஓட்டு மூலம்
பெற்றே ... மேலும் ...

அய்ந்து வருடங்களுக்கு
அவர்களய் எல்லாம்...

குருடர் செவிடர்
ஊமய்கள் ஆக்கியே
குதித்துக் கூத்தாடிக்
குதூகலிக்கத் தாமே!



(Blind,Deaf&Mute school)

❋❋❋

## 13. அரசியல்...வா/வியா- திகள்?

★ ம(ா)க்களது "ஓட்டு" வாங்கி
மந்திரி அமய்ச்சர் ஆனோர்
"புலட் புரூப் மோட்டார் காரில்"
புயற் காற்று வேகத்தில்


"தார்" ரோட்டில் பறந்துபோகும்
அவசரம் எதுவாமோ?



★ வாக்களித்த மக்கள்
வழிமறித்து வணங்கி
மாலய் இட்டே தம்மய்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மரியாதய் செய்வதய்யே ...

விரும்பாத பெருநோக்கோ?
வேறு நோக்காடு எதுவாமோ?

★ "முன்னும் பின்னும்
ஆமி பொலிஸ் ஜீப்புகள்"
தம்மய்ப் பாதுகாத்தே - புயற்
காற்றாய்ப் பறக்கும் காரணத்தய்
சனத்துக்குச் சொன்னால் ...
சந்தோஷப் படமாட்டாரோ?





★ அவர்கள் வந்து அடய்யும்
அய்ந்து நட்சத்ர ஓட்டலிலும்
துப்பாக்கி தோளில் சுமந்தே ...

முப்படய் வீரர்களும் - முழுவதும்
சுற்றி நின்று பாதுகாக்கும்
சூத்திரமும் எதுவாமோ?

★ மோப்ப நாய்ப் பட்டாளமும்
அவ் வோட்டல் அறய்களின் ...
மூலய்க்கு மூலய் நின்றே - முனகி
மோப்பம் யாரய்ப் பிடிப்போ?





★ எலும்பும் தோலுமாக
எங்கள் முன்னே வந்தே
அன்று ஓட்டுக் கேட்டோர் ...

இன்று அடய்யாள மின்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எருமய் மாட்டு "சய்ஸ்" ஆன
காரணம் என்ன வென
எங்களுக்கும் சொன்னால் என்ன?



★ எழுபது வயது கடந்தும்
முழுத் தலய் தாடி
மீசய் மயிர்களில் ...


ஒன்றுமே நரய் காணாத
உண்மய் நிலய் சொன்னாலென்ன?

(Mystery of Politics)

❋❋❋

## 14. சிந்தனய்க்கே ...

★ யானய்யய்க் கொல்லுதல்
மகாபா வம்என
ஆணய்யிடும் சமய
பக்தி மான்களே!



யானய்நிதம் மனிதனய்க்
கொல்லு தலய்யே
ஆம்! சரியே! என்றே
அங்கீ கரிப்போ?

★ மாட்டய்க்கொலய் செய்தல்
மகாபா வம்என
மார்தட்டிக் கூச்சல்
இடுவோ ரேதாம்



ஆட்டய்க் கொன்றே
கறியாய் சமய்த்தே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆமாம்! உண் டுகளிப்
பேபுனி தமாமோ?



★ அதுபிழய்யே! இதுவோ
சரியே! என்பது
அறிவுடய்யோர் தமது
நற்சிந் தனய்யோ?

மதத்துக்கு மதமே
மாறா ன செயலே
மாண்புளனக் கூறல்
மகுடி யன்றோ?

★ அவரவரின் மதமே
சிறந்த தென்றே
ஆளய்ஆள் கொல்லும்
அநியா யத்தய் ...

அவனியிலே இவர்கள்
உணரா ததுவோ ...

அசிங்கம் அவ லட்சணம்
என்றே முனிவோமே!

★ காலம்இடம் சூழல்
களுக்கே இயய்வாய் ...

ஞாலச்செயல் கள்தாம்
மாற்ற முண்டாம் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூளய்ச்சல வய்ஆம்!
செய்தே மக்களய்
மூடர்கள் ஆக்கல்
எல்லா மதங்களுமே!

(Food for thought)

❋❋❋

## 15. ச/ப - ங்கம்...?

★ சங்ககால இலக்கியத்தில்
மாத்திரமே தாம்
சத்துச் சாரம்
உண்டு என்றே ...

சப்பித் திரிகின்ற
பழம்பெரும் கிழம்
கலய் இலக்கிய வா/ வியா -திகள் ...

★ எமது இளம்கலய்
இலக்ய கர்த்தாக்களின்
சமகால படய்ப்புக்களில் ...

சத்துசாரம் சிறிதும்
இல்லய் என்றே சப்பிக்
கக்கித் திரிகின்ற
காரணம் தாம் யாதோ?

★ "எட்டாத மாம்பழம்
சுத்தப் புளிப்பு!" என்றே
கத்திக் கதறியே அழுதே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஒப்பாரி வய்த்தே
ஓலமிடலே கிழம்
நரிகளில் விரக்தி என ...

எமது இளய்ஞர் யுவதிகள்
புரிந்து நகய்த்தே
நவயுகப் புதுப்
பயணிப் பாமே!

(Traditional Mockery)

❋❋❋

## 16. Theory and Practice?

★ Religious Precepts
If to be preserved
Let it be in any
Country of the globe;

★ Preachers ! thou art
First pratise first
Before preach them all.

★ That should be the
Order if at all
To preserve the precepts
To last to glow!

★ Then it woud shine
As Stars and moon
Behind the glow
To be glimpse of Sun!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ If not the theory
And practice of
Such precepts be Aye!
Poles apart!

**(Theory versus Practice)**

❋❋❋

## 17. குறுக்குவாக்குக் கவிதை ...

★ **(Cross- stick - ஆங்கிலக்கவிதை**
**நடையைத் தழுவி, தமிழ்க் கவிதை**
**நடைக்குள்ளும் புகுத்துவோம் ...**

**Limerick - ஆங்கிலக் கவிதையை**
**"குறும்(புப்)பா" வெனப் புகுத்தியதைப் போல)**

**ஆங்கிலம் :-**

Pearl thou Art
Ever to Shine
Aye! To be bright, we
Call upon you! Is thy
Ear still so deaf?
(PEACE)

**தமிழில் -**

**அதியுயர் முத்தே- அ**
**மைதியே! உன்**
**திரு காதும் செவிடோ?**
**(அமைதி)**

❋❋❋

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 18. கந்தா! வரந்தா!

★ காரேறிப் பவனிவரும்
காசுபணப் பக்தருக்கே
கய்லாகு நீ கொடுத்தே ...

வீதி வலமே
தேரேறி வரும் கந்தா !

★ காருக்கும் தேருக்கும்
பின்முன் நடந்தே
தெருவில் நின்றே நாங்கள் ...
ஏங்குகின்றோம்!



★ எம் மதமே தாம்
எல்லா மற்றய்ய
மதங்களய் விடவுமே
சிறந்தது என்றே ...

கூறுகின்ற சுத்தச்
சிறுமதியரோ ...

★ கண்ணாடி
வீட்டுள்ளே இருந்தே ...

கல்லெறியும் புனிதக்
கயவர்கள் என்போம்!

★ எம் மதமும் பொய்
மதமே என்கின்ற ...

உரிமய்யோ ஆம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எவர்க்கும் உண்டு
என்றே ஏற்போம்!

* எங்களுக்கோ காரும்
தேரும் வேண்டாம் ...
காசு பணமும் வேண்டாம் !

★ சொந்தமாய்ச் சிறுவீடும்
(சின்ன வீடு அல்ல)
சேனய் செய்யச் சின்னச்சிறு
காணித் துண்டும்
சேர்த்துக் தாடா!

★ எங்களது தோட்டக் காட்டு
இருநூற்றாண்டு நீண்ட
அவலத்தய்ப் போக்காது - நீ
தேரேறித் தெருவில் வந்தால் ...

சந்தி சிரிப்பதற்கே - ஆம்!
நாம் குழய்த்த - மாட்டுச்
சாணி யடிப்போம் .... ஆம்!



வள்ளி தெய்வானய்
மணாளா!

★ கலியுக வரதன் நீ
அல்ல வென்றே சீச்சீ!

உன் ஆறுமுகத்தில் நாங்கள்
கான்றி யுமிழ்ந்தே - உன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலய் நாங்கள் பிடித்தே
வாரி வீழ்த்தும் முன்னர் ...

விடய் கிடய்க்காது
விடிலோ ... தொடரும் ...
விவகாரம் தான் வேலவா?

(Whither Mod- God)

***

## 19. தவிப்பூ...?



★ தரமான தர்ம நீதிகளய்
உரமான உண்மய்களய்
உள்ளடக்கியது தாம் ...

சித்தார்த்த புத்தனில்
பவ்த்த தர்மமாமே?

★ தரங் கெட்டோர்
கய்களிலே அது இன்று ...

“தேரவாதம் மகாயானா” வெனச்
சிக்கிக் கொண்டே சீச்சீ!
சீரழிவாமே!

★ ஓ ! அதனால் தாமோ
புனித சித்தார்த்த புத்தனின்
அத்தனய் கற்சிலய்களும் ...



இரு கண்களய்யும் அய்யோ!
இறுக்கி மூடிக் காட்சீ ?

(Yearning)

***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 20. தேவ... அடியாள்?

★ தேவடியாள் பரத்தய்
வேசி தாசி எனக்
கேவலமாய் அவ
மானப் படுத்தப்பட்ட
அன்றய நாட்டியம் ...

★ இன்று -அந்த
பரத்தய் நாட்டியம்
பாரத நாட்டியமாக
பெயர் மாறி ...

★ தெருவினிலே அலங்கார
மேடய் சமய்த்தே ...

கனதன வான்கள் கூடி
தமது திரு வாயின்
கடய்வழியில் உமிழ்
நீர் வடியவே ...

பார்த்துப் பல்
இளித்து ரசிப்பே?

★ பாரதம்
பரத நாட்டியமாய்
மருவி வந்து ...

மேட்டு வர்க்கப்
பெண்டு பிள்ளய்களும்
வீட்டுக்குள் ஆடியே ...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேசப்
புகழ் பெற்று ...

★ இன்று அது
ஏழய் எளியவர்களுக்கு
எட்டாத உயரத்தில் !
காசு பணமுடய்யோரின்
கய்ப் பாவய் யாகி ...

கோயிலுக்குள் கூடி
கொழு வீற்றிருக்கும்
கலய்யாக மாற்றமே?



★ கால மாற்றத்தில்
பல பழம்
அலங்கோலங்கள் ...

புதுப்புது நவ
கோலங்களாக மாறி
பொருள் தருமே!

★ வர்க்க முரண்பாட்டு
விரிசல் ஏற்படாது
மக்கள்ய்த் தடுக்கும்
சதித் திட்டமே ...

இந்தத் திருகுதாளச்
சதிர் ஆட்டமே!

(Pros & Cons)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 21. ம/வி -ருந்தும்?

★ மருத்துவர்களுக்கு
மருந்து வியாபாரிகள்
விருந்து படய்ப்பது
சிறந்த தாமே?

★ தனது மருந்தே
அதி சிறந்தது என
மருத்துவர்களய்ச்
சொல்லவய்த்தே ...

மருந்து வியாபாரிகள்
தமது விற்பனய்யய்ப் பெருக்கி
ஆதாயம் குவிக்கவே!

(மாறு)

★ "ஆதாயம் இல்லாமே
எடய்யன் சும்மா
ஆட்டய் கட்டி
மேய்ப்பானா?" என்ற
கிழம் பழமொழிக்கு ...



★ இது ஒரு
சிறந்த உதாரணமே!

(Medical Treat)

❋❋❋

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 22. தெய்வம் தொழார் ...

★ வன்செயல்
புண் செயலால் ...
போராட்டக் கொலய்கள் ...
கொள்ளய் தீமுட்டல்
தொல்லய் தொடராலே ...



செத்துப் பலர்
தொலய்வே!
சிதய்த்த வீடுகள்
பலவே!

★ சிதய்ந்த வீடு
வாசல் களய்
புனரமய்ப்புச் செய்தே ...



பழய நிலய் எய்த
பிற நாடுகளில்
நம் நாடு - பிச்சய்
கடன் படவே
உடன் பாடே ?

கடனுடன்
வட்டியுமே
மீளக் கூட்டிக்
கட்டித் திர்ப்பதற்கே ...

நாட்டு மக்களுடன்
நான் கய்ந்து

කළු ජූලි

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் சந்ததிகளின்
தலய் விதியே?



வன் செயலில்
ஈடு பட்டே
செத்து மடிந்த
மக்களுக்காய் - சிவப்புக்
கண்ணீர் வடிக்கும்
தாய் தந்தய்யர்
தமிழர் பலவாமே!



நாட்டய்க் காக்கவென
முன் வந்தே - முப்
படய்யில் சேர்ந்தே ...

செத்து மடிந்த எம்
சிங்கள இளய்ஞரின்
தாய் தந்தய்யர் - செந்
ரத்தக் கண்ணீர்
வடிப்பாமே!




நாட்டய் காத்த
தலய்வர்கள் என
நாட்டய்க் கெடுத்த - துரோகிகளாம் ...

சிங்களத் தமிழ்
அரசியல் வா/வியா - திகளய்ப்
போற்றிப் புகழ்ந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடுவதோ ...
புத்தி இல்லார் தம்
செயலன்றோ?

★ மக்களய் இழந்த
ஏழய்களாம் ...



சிங்களத் தமிழ்
தாய் தந்தய்யர்
ஓலமிட்டே
அழுங் குரலோ,

செவிடன் காதில்
சங்காமே?

★ இறந்த எமது
இளம் மக்களய்
எமக்கு இங்கே
மீட்டுத் தந்தால் ...



அவர்களய் நாமோ
தெய்வம் என்றே
தொழுவோம் என்றே ...



கிழம் சிங்களத்
தமிழ் தாய்மாரும் ...
தந்தய்யரும்
தெருவில் நின்றே
கூக்குரலே?

(Whither ressurrection)

❋❋❋

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 23. இன வாதம்...?



★ இன வாதம் பேசி
நடித்தே
அரசியல் நடாத்திய
சிங்களத் தமிழ்த்
தலய்வர் களினது
மகன் மகள்மார்
எவருமே ...

★ இன விடுதலயப்
போராளிகளாகவோ ...

போர்ப் படய் வீரர்
வீராங்கனய்கள் ஆகவோ ...

உயிர் நீத்ததாக
சரித்திரம் உண்டோ?

★ ஏழய் விவசாயி
தொழிலாளரின்
சந்ததியினரே ...

இரு முனய்ப் போராட்டத்துக்கும்
பலிக் கடாக்களே!

★ ஆனால் -
பேரும் புகழும்
படு பிற்நோக்கு
அரசியல் கட்சிகளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலய்வர்கள் எனப்படும்
தனவான்களுக்கே?

(Whither National Heroes)

***

## 24. சுரண்டல்...?

★ வெளி நாட்டு
வெள்ளயக்காரர்
எமது நாட்டில்
சுரண்டியே ...

வெளிநாட்டுக்குக்
கொண்டு செல்வதாக
அவர் களய்
வெளி யேற்றிவிட்டு ...
சுதந்திரம் பெற்றோம்!



★ இன்று -
உள்நாட்டுக்
கறுப்பர்களோ ...

உள் நாட்டில்
சுரண்டியே ...

வெளிநாடுகளுக்குள்
கடத்திச் சென்றே
குவிப்ப தாகக்
குட்டு வெளிப்பாடே?

(Whither exploitation)

***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 25. ம/வ - தழும்?



★ மத இன நிற இட
வெறிபிடித் தலய்யும்
மட்டி மடய்யர்கள்
மலிந்த உலகில் ...

தினந் தினம் மக்கள்
செத்தே மடியும்
செய்திகள் சீச்சீ!
சிறந்து பாமோ?



★ மதங்கள் அனய்த்தயும்
அழித்தே ஒழிக்க
மக்கள் ஒன்றாய்
திரண்டெழும் வரய்யில் ...



சீச்சீ ! இத் தீச்செயல்
தொட ராமே!

★ எம் மதமுமே ஆம்!
பொய்மதம் என்றே - சுய
புத்தி மக்கள்
பெறும் வரய்யில் ...



மத இன நிற இட
சதி வெறி தொடரே!
சுய புத்தி
நாம் பெறல்
தாம் என்றோ?

(Curse of Humanity)

❋❋❋

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 26. பாக்கியவான்?



★ "கஷ்டப் படுபவர்கள்
பாக்கிய வான்கள்
சொர்க்கத்தய் அடய்வார்கள்"

என்றே சொன்ன
சூத்திரதாரி யாரே?

★ செத்தவன் எவனுமே
திரும்பி வந்தே ...

தான் சொர்க்கத்தில்
அனுபவித்த சுகத்தய்
சொல்ல வில்லய்யே!

★ இல்லாத சொர்க்கத்தய்
சாக்கு வய்த்தே ...

ஏழய் எளியோரய்
ஏமாற்றவே ...

உள்ளாரய்ப் பாதுகாக்கும்
உபாயம் தான் ...

சொர்க்கம் நரகம் எனும்
சூதாட்டமே!

(Hell & Heaven)



❋❋❋

60. அரசியல்,,வா/வியா-திகள்?
(கவிதய்கள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 27. ஏ/ மா-ற்றம் ?


* சீர்திருத்தக் கருத்துகளய்
மேடய்களில் சிந்துவோர் ...
நடய் முறய்யில் நாட்டல்
நாம் காண்கிலோம் !

* பத்திரி(க்)கய் களில்
பந்தி பந்தியாக நீட்டிப்
பல பக்கம் எழுதுவோரில் ...
எவருமே அவற்றய்யே
நடய்முறய்யில் நாட்டல்
நாம் காண்கிலோம்!



* சந்திக்கும் சந்திகளில்
தாமே நின்றே சதா
சமதர்மம் பேசுவோரில் ...
எவனுமே அதில் தான்
மனம் பதித்தோன் - நாட்டில்
இல்லய் என்றே ஆம்!
மக்கள் சாடல்!

* இந் நிலய்யே எங்கும்
தொடருவதால் சீச்சீ!
செந்தமிழர் பரம்பரய்யில்
இதுவரய்யில் ... ஆமாம்!
ஏற்றமில்லய் - ஏ
மாற்றமே! - நவ
மாற்றம் எப்போ?



(Whither Progress)

***

ஆக்கங்கள் : 52

பக்கங்கள் : 72 + 04 = 76
பிரதி விலய் : ரூ. 250/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 28. து/ ந-ம்பிக்கய்?



✶ தும்பிக் கய்யான்
யானய் முகத்தான் மேல் நீ
நம்பிக்கய் வய்த்தால் ...
உன் கய் என்றுமே
உயராது அறிவாய்!

✶ உன் இரு
கய்களில் நீ
நம்பிக்கய் வய்
ஓங்கியே மேலே ஆம்!
உயர்வாய் நீயே!

(மாறு)

✶ காட்டு யானய்க்கு எந்த
நாட்டு மொழியும்
பேச எழுத வாசிக்கத்
தெரியாது என்ற
புத்தி இல்லாத படு
மூடர்கள் தாம் ...

✶ "விநாயகனே! வினய்
தீர்ப்பவனே!" என்றே
பித்துப் பிடித்தோர் போல் ...
வீண் பிதற்றலாமே!

(Whither Superstition)

✶✶✶

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 28. அந்த நாள்?

✶ சாதி மத இன வெறிப்
பீடய்களய் எல்லாம்
சாடிச் செல்லாக்
காசோலய் எனக்
கான்றி யுமிழ்ந்தே ...

✶ எமது - இளம்
யுவன் யுவதிகள்
அவய்களுக் கெல்லாம்
சாவோலய் வாசிக்கும்
சன்மார்க்க நாளே ...

✶ மானுடம் சிறக்கும்
ஈடு இணைய்யற்ற
இன்ப நாளாம் - ஆம்!
இனிய நாளே!




(Whither Humanity)

✶✶✶

## 29. ஆட்சியின் "மாட்சி"?

✶ சனநாய் அகம்
எனப் படுவதன்
தத்துவம் ...

பணநாய் அகப்
பாதுகாப்பே தாம்
பக்குவம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* சோச லிசமும்
சோடி சேர்ப்பின்
சூத்திரம் ...

மோசடிக் கே
முகமூடிக் கான
சாத்திரம்!

* குடி யரசும்
கூட்டுச் சேர்ந்த
சூதகம் ...

* சூடு சூடி கொலய்
கொள்ளய் மோசடிகள்
கொடி காட்டிக்
கட்டிப்பறக்கும்
சாதகம்?

* மக்கள் விழிப்
படய்ந்து எழுந்தே
இவய்களய் தாம்
எட்டி உதய்த்தே
தொலய்க்கும் வரய்
இக் குணம் ...

என்றென்றும்
மாறாத தொல்லய்
சிக்கணம்!



(Stale Egg)

★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 30. ஞானக் கண்?

* கருமாதி கல்லெடுப்பு
திதி திவசத்துக்
குள்ளே தாம் ...

தெய்வீக சுக
சொந்த பந்தம்
தெளிவாகத்
தெரிகிறதாமே?



* செத்தவனய்ச்
சவக் குழியுள்
புதய்த்தாலும் ...

அவனுடைய ஆத்மா
சொர்க்கம் சென்று
சுகம் பெறுமாமே?

* சாறாயக் கள்ளு
குடிவகய்ப் போத்தல்கள்
அய்ந்து ஆறய்ப்
படய்யல் செய்தே ...

கூடிக் குடித்தே
கொண்டாடிய வெறியில்
தெளிவாகத் தெரிந்த ...
தெய்வீக ஞானம்?

(Ritual Post-mortem)

***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 32. அரச / மற-இயல்?

★ பல கயவர்கள்
தனித் தனி அரசியல்
கட்சிகள் அமய்த்தே ...
தலய்வர்கள் ஆகும்
தாற் பரியம் என்ன?



★ மந்திரி அமய்ச்சராகும்
மனப்பால் குடிப்பே?

★ கொழுத்த சம்பளம்
ஊழல் மோசடிகளில் ...
தனபணம் குவிக்கும்
தணியாத் தாகமே?

★ தோல்வியத் தழுவி
வீடு சென்றாலும் ...
தொடரும் கொழுத்த
ஓய்வூதியமே
குபேர வாழ்க்கய்?


★ செத்துச் சிலர்
தொலய்ந்த பின் கல்
தெருச் சிலய்யாகி
(சிரிப்புக்கல்ல)
சிறப்புப் பெறவே?




★ உண்மய் உணரா
ஊர் ம(ா)க்களோ ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்று கூடியே
கற் சிலய் களுக்கே
பூமாலய் சூட்டிப்
புகழ்ந்துபாடி ...
ஆராதனய் பூஜய்
ஆஹா! ஓஹோ!



✶ காக்கய் குருவிகள்
அச் சிலய் தலய்களில்
எச்ச மிட்டே
சீச்சீ! அசிங்கமே!
த(ர்)க்க விமர்சனமே?



(Political Commentry)

✶✶✶

## 33. மழய்க் (கே)காலம்?



✶ மழய்க் கால
அவல ஓலத்தின்
வெழிப் பாட்டில் தான் ...
மண் குடிசய்கள்
ஓலய்க் கூரய்யின்
கணக்கெடுப்பின் முழு
விவரம் வெளிப்பாடே?

✶ மண் குடிசய்க்குள்
மண் சரிவால் புதய்யுண்டு
முழ்கி மாண்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களின் மாக்களின்
சரியான கணக்கெடுப்பு
கிண்டி எடுக்கப்பட்ட
சடலங்களின் சரியான
எண்ணிக்கய்யின் பின்னர் ...

கிண்டியும் கிடய்க்காத
எண்ணிக்கய்யும் சேர்த்தே ...
பின்னர் அறிவிக்கப்படும்?

✶ வெள்ளப் பெருக்கில்
அடித்துச் செல்லப்பட்ட
குடிசய்களினதும் அங்கு
வாழ்ந்த மக்களினது
சரியான எண்ணிக்கய்யய் ...



தேடிக் கண்டுபிடித்த
சடலங்களுடன்
வாக்காளர் பட்டியலில்
இருந்தே கழித்துக்
காணாது போனோரய்
கண்டு பிடித்த பின்னர்
முழு எண்ணிக்கய்யும் ...


பாராளு மன்ற விவாதத்தில்
அடுத்த அமர்வில்
சமர்ப்பிக்கப்படும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✶ பவ்த்த விகாரய்கள்
இந்துக் கோவில்கள்
இஸ்லாமிய கிருஷ்தவப்
பள்ளிகளில் சகதிகளில் ...

அகதிகளாக ஓடித்
தஞ்சமடய்ந்த தரித்திர
உருப்படிகளின் எண்ணிக்கய்
நாலரய் லட்சத்தய்யும்
தாண்டி விட்டதாக
உடனடித் தகவல்?

✶ அத்தனய் விவரங்களய்யும்
ஒன்று சேர்த்துத்
திரட்டி ... முழு நீள
அறிக்கய் சமர்ப்பிக்கச்
சொல்லி ... நமது குடி அரசு
நாட்டு முதற் குடிமகன்
முப்படய்யினருக்கும்
ஆணய்யிட்டுள்ளாராம்?



✶ தஞ்ச மடய்ந்த அதிதி
அகதிகள் எனப்படும்
அத்தனய் பேருக்கும்
உடனடியாகத் தகுந்த
உணவு உடய்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விநியோகிக்கச் சொல்லி
சம்பந்தப்பட்ட அமய்ச்சுக்கு
விசேட உத்தரவு?

* அடிக்கடி மழய் வெள்ள
மண்சரிவு அனர்த்தம்
ஏற்பட்டால் அது
நல்லது என்றே நமது
நாட்டு மக்களின்
கூட்டுப் பிரார்த்தனய்யே?



* சாதி, மத, இனப்
பிரதேச, இட, நாட்டுப்
பேதங்களய் மறந்து...

உலக நாடுகள்
அனய்த்திட மிருந்தும்
உதவி வேண்டியே
தாழ்மய்யான வேண்டுகோள்?

* உலகமே ஒரே
கிராமமாக நெருங்கி
ஒன்றுவற்கு இதுவே
சிறந்த சந்தர்ப்பம்?



(Whither Global Village)

***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 34. (கு) தர்க்கம்?

✶ மகன் : சொர்க்கம் நரகமுண்ணு
சொல்லுகிறாகளே ...
அதுக ஆமா!
எங்கே? இருக்கு
அப்பா!

அப்பா : அதே -
செத்துப் போன எமுட்டும்
ஒங்க அம்மாவுட்டும்
அம்மா அப்பாகிட்டே
போயித்தான் நாம
தெரிஞ்சுகுறோனுமுடா!



மகன் : நீயும் அம்மாவும்
சேந்து போயி
அவுகளேச் சந்திச்சீ ...
கோட்டுத் தெரஞ்சிக்
கிட்டு வந்தா
எல்லா வெவரத்தய்யும்
எனக்கும் தங்கச்சிக்கும்
எடுத்துச் சொல்லுறியா?

அப்பா : நாங்க போனா ...
திரும்பிவர ஏலாதுடா !

மகன் : அப்போ! நீ இருந்குக்குட்டு
அவுகளே அனுப்பு!

அப்பா : ???

(Whither Hell and Heaven)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 35. ஆண்டி ஆனதென்ன?



* அண்மயில் ஏற்பட்ட - மழய்
வெள்ள அணர்த்தத்தில் - தனது
வம்சாவளியினரான
தம்பான வேடுவ - சிங்கள
இனத்தினரின் நிலய்மய்யய்
நேரில் கண்டறிய
வள்ளி யம்மய்
மய்யங்கனய்க்குத் - திடீர்
விஜயம் செய்தாளாம்!
ஆரிய சிங்கள அமய்ச்சருடன்?

* தெய்வானய்யின் - தமிழ்
வம்சாவளியினரின்
தற்போதய்ய - நாட்டு
நிலய்மய் என்னவென
நேரில் கண்டறிய
திரு முருகனும் - தென்
இந்தாயாவுக்குச் சென்றே ...
வசமாக மாட்டிக் கொண்டான்!



* இலங்கய்யில் இருந்த
போது - வள்ளிமயில்
தனது தலய் மயிரய்ப் போல
முருகனின் தலய்மயிர
முழுதும் தனிக் கறுப்பாக ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்க வேண்டும்
என்பதற்காக - அவள்
முருகனின் நரய்மயிர்
அத்தனய்யும் பிடுங்கி
தனிக் கறுப்பாக்கினாளாம்!

* தெய்வானய் - தனது
தலய்மயிர் முழுதும்
நரய்கண்ட போது
அது எப்படி? - முருகனின்
தலய்மயிர் முழுதும்
கறுப்பாக இருக்க
முடியும்? என்ற
காட்டத்தில் - அவள்
முருகனின் கறுப்புத்
தலய்மயிர் முழுவதய்யும்
பிடிங்கி எறிந்துவிட்டாளாம்!



* கோவண ஆண்டியாய்
இருந்த ஆறுமுகன் - இன்று
தலய் முழுவது - மொட்டய்
ஆண்டியான ஆதங்கத்தில்
தலய்யில் அவன் - அந்தக்கோவணத்
துண்டுத் துணியப் போட்டு
மூடிக் கொண்டு
தலய் மறய்வாம்?

(Plight by Wife & Keep)

***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 36. வெறுந்தலய்?

✶ சிறுவரிட்ட வேளாண்மய்
வீடுவந்து சேராது என்றே
விதந்துரய்க் கின்றார்கள் ...
வயல்வரம்பில் என்றுமே
தாம் கால் பதிக்காத
மரபுவழி வேதாந்திகள்!

✶ அந்நாளில் பிடுங்கிக்
கட்டிச் சேர்த்து வய்த்த
நரய்மயிர்கள் மாத்திரமே
திறமானவய் என்றே
தெருப் புகழே!

✶ வெட்டிக் கதய்கள்
இவய்கள் என்றே
எமது இளவல்கள்
எட்டி ஓடி - அ
தட்டிக் குரலே ...



✶ "மயான காண்டத்து
மறுபதிப்பால்
மக்களுக்கு நன்மய் இல்லய்
என்றாலும் நாம்
விட்டுவிட மாட்டோம்
என்றே தொடராய் ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீண் விவாதம்
செய்கின்றார்கள்.
வெறுந்தலயச் சாத்தனார்கள்!''

(Whither Novelty)

★★★

## 37. இனக் கலவரம் - 1983 ?



★ அநாதய்யாக அங்கும்புற
சிங்களக் கிராமத்தில்
மரமேறி தேங்காய், மாங்காய்
பலாக் காய்கனி பறிந்தே
உயிர்வாழ்ந்து ...

மாலய்யில் கள்ளு கசிப்புக்
குடிவெறியில் - அக்
கிராமத்தில் கூச்சலிட்டே
அட்டாகம் புரிந்த
முருகனுக்கு - நல்ல
பாடம் புகட்டச்
சென்ற - சில
சிங்களக் காடய்யர்களுக்கு
ஏமாற்றமே ...

★ வழியில் ஒரு பவ்த்த
பிக்குவய்ச் சந்தித்த
சிங்களக் காடய்யர் :
''சாது கொஹாட்டத
வடின்னே!'' எனக் கேட்க ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(சாது! எங்கே விஜயம்?)



முருகன் : "வாஞ்சாலேட்ட
வடின்னே! - அத
விரித் - எட்ட
வன!" என்றான்!
(பன்சல்யிக்குச்
செல்கிறேன் - இன்று
பிரித் ஓதல் - நாளய்
பன படித்தல்!)

சிங்களக் காடய்யர்கள் - முருகனது
குடிசயக்குச் சென்று அங்கு
அவனயத் தேடி - ஆம்!
ஏமாற்றம் அடய்ந்தனர்!

அங்கே அவனது
கிழிந்த காற்சட்டய், கயிறு
கோவணமும் மட்டுமே ...
கட்சியளித்தன!


காட்டிக் கொடுக்க அவர்களுடன்
கூட்டுச் சேர்ந்தே சென்ற - ஒரு
தமிழ் பேசும் குடிமகன் ...
"முருகன் நமக்கு இத்த
கயிறு குடுத்துட்டு
மலய் ஏறிவிட்டான்" என்றான்!

(Narrow Escape)

***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 38. தெய்வம் ...?



✶ மரம்செடி கொடிகள்
உயிரின மனய்த்தின் ...
கண்கண் டதெய்வங்
கள்தாம் ஆமே!

✶ உயிர்வாழ் இனங்களுக்கு
உணவாய்க் காய்கனி
கிழங்கு இலய்குலய் ...
தருபவய் அவய்களே!

✶ அத்துடனே -
கரியமல வாயுவய்
தாமுட் கொண்டே ...
பிராண வாயுவய்த்
தருவதும் அவய்களே!

✶ உயிரினங் களுக்கோ
வயதெல்லய் உண்டு,
எல்லய் இல்லாது
நீண்டு வாழ்பவய் ...
அவய்கள் தாமென
நாம் உணர்வோமே!

✶ மானிடர் வாழும்
மண்ணய்க் காப்பவய் ...
மரஞ்செடி கொடிகளின்
வேர்கள் தாமே!

(Tree, Bush & creepers)

✶✶✶

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 39. ஆ/ மா-ட்சி...?




* இந்தியாவில்
நேருவின் நீண்ட
குடும்ப அரசாட்சிக்கு
முடிவுகண்டதய்ப் போல...

* சிரி லங்காவிலும்
சேநா/பண்டார - நாயக்க
ராஜபக்ச குடும்ப
அரசாட்சிக்கு
முடிவுகண்டாலும் ...




* நாட்டில்
மக்களாட்சி நாளய்
மலரும் வரய்யில்
விடிவே இல்லய்!

(மாறு)



* அப்போ -
நீலப் பச்சே சட்டய்யே
கழட்டி வீசீட்டு - தனிச்
செவப்புச் சட்டே - தொப்பி
போட்டுக்கிட்டு - துணிஞ்சி
வீதிக்கி எறங்கிப்
போராடச் சொல்றீகளா?
கிழிஞ்சுது போ!



(Whither Dawn)

***

Politicos
(Poetry)

- Eeveraachaasa
Kandy M. Raamacha
(R. Muthucarupa

M. Raamachandhra
RAAMACHANDH
#. 2/1, Riverdale Jun
Aniwaththa, Kandy-
SHRI LANKA - 009

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

icos ?
etry)

## 40 . நா / கே-டு... ?

*

நாட்டு
ஆட்சி இப்போப்
புதுசா ஒரு
நல்ல நெலய்க்குத்
திரும்பு தூண்ணூ ...

இதன் மேல் ஆமா!
நப் பாசே
வய்க்காதீக ...

*

பழய்ய
குப்பய் மேட்டில்
இருந்தோரே
பிரிந்தே ஒண்ணாக்
கூட்டுச் சேர்ந்தே ...
நாடகங்கோ!



*

இதேக்
கட்டிக் காக்
கோணுமுண்ணூ
கட்டீ அழுதீகண்ணா ...

*

கட்டி இருக்கும்
கிழிந்த பழய்ய
கோவணமும் பறி
போகுமுங்கோ!
ஆமாங்கோ!



haasan-
achandhran
arupan)

andhran
ANDHRAAS
lale Junction
Kandy- 20,000
A - 0094

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



✶ முட்டி இதுக்
கும் ஒடய்ச்சீப்
புது நல்ல
மாற்று வழி நாம்
காணும் வரய் - துர்
நாற்ற ஆட்"சீ" ...
மாட் "சீ" தொடரே!


(Whither Good Goverance)

✶✶✶

## 41. மீட்டல் ... ?

✶ போதி மரத்துக்குள்ளே
புத்தபிரான் இருப்பதாகப் ...
பவ்த்த தர்மப் போதனய்யில்
எங்கேயும் உண்டா?

✶ "பாவங்கள் போக்குவதற்கும்
புண்ணியங்கள் பெறுவதற்கும்
போதி மரத்துக்கே
பூஜய் செய்வாய்!" எனப்
புத்தபிரான் புகன்றதாக
சான்றேதும் உண்டா?



✶ "நீ விதய்த்த
விதய்ப் பயனய்
மாத்திரமே நீ
அறுவடய்யாய் ஆம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெறுவாய்! " என்றே
திரிபு இன்றி மொத்த
அழுத்தம் திருத்தமாகச்
சொல்லிச் சென்றான்!

* புத்தனது போதனய்யில்
புழுதி படிந்தாற் போல...
நடய் முறய்கள் எங்கும்
நாட்டல் காண்பீர்!

* புத்தபிரான் போதனய்யய்
மீட்டல் செய்தே
அதிலே படிந்த பல
புழுதிகள் போக்காவிடில் ...
பவ்த்த தர்மம் சீச்சீ!
பாழ்பட்டுப் பதடி யாமே!

(மாறு)

* கொலய், கொள்ளய், பொய்
கூடா ஒழுக்கம்
மது அருந்தல் - ஆகிய
இவய் அய்ந்துமே ...


தவிர்த்து வாழ்ந்தால்
ஆமாம்! போதுமே
பவ்த்த தர்மம் சிறக்க!

(Revision of Buddhism)

***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 42. சொல் / செல்(லா) - வாக்கு?



* தேர்தல் காலத்தில்
அரசியல் கட்சிகளின்
வேட்பாளர்கள் ...
அள்ளி வீசிய
ஆசய் வார்த்தய்கள் ...
நடய் முறய் ஆனால் ...

* ஊரென்ன, நாடென்னா ...
உலகம் முழுவதுமே
மீண்ட சுவர்க்கமே!

* தேர்தல் தெருக்கூத்து
முடிந்து மடிந்ததும் ...
வாக்குறுதிகள் மக்களுக்கு
வாய்க்கரிசிகளே?

(மாறு)

## குறும் (புப்) பா ... (Limericks)

* சுதந்திரம் கிடய்த்ததாகச் சொல்லி
சுத்தமாய் 68- ஆண்டய்த் தள்ளி
அதம் வதச் செயல்கள்
அனுபவித்தது அல்லால் ...
இதந்தரும் நலமென்ன சொல்ல?

(Perversion of Election Promises)

***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 43. மதங்கள்?

✶ செத்த பின்னர் மக்களைப்
இல்லாத சொர்க்கத்துக்கு
அழைத்துச் செல்லும்
வழிகாட்டிகள் தாமே ...
எல்லா மதங்களுமே!



✶ மதக்கடை நடத்துவோரின்
மகுடியில் மக்கள் மயங்கி
மதிஇலிகள் ஆனதுவே...
சதிச் சதிர் நாடகமே!

✶ கற்சிலைப் படங்களே
தம்மைக் காக்கும்
கண்கண்ட கடவுளர் என
கண்மூடி வணங்கும்
கண்ணிருந்தும் குருடரானார் ...
மக்கள் தாமே!

✶ சடங்கு சாத்திர
சம்பிரதாயங்கள் என
சாக்குப் போக்குக் காட்டிப்
பிராமணர் எனப்படுவோர்
முதலின்றிக் கடைநடத்தி
பணம் பறிக்கும் - கபட
நாடகம் தாம் தொடரே !

(Whither Religions)

✶✶✶

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# 44. தேசியக் கொடி ... ?

✶ முழு தேசியக் கொடியின்
அய்ந்தில் நாலுபங்கயச்
சிங்கள வர்களுக்கு ஒதுக்கி
அதற்கு நடுவில் ...
மாமிச உண்ணியான
சிங்கத்தய் வாளுடன் வய்த்து ...
நாலுபக்க மூலய்யில்
அரசஇலய் பதித்துவிட்டு ...

✶ அய்ந்தில் ஒரு பங்கய் மட்டும்
ஓரங்கட்டி - அதில்
அரய் அரய்ப் பங்கய்
தமிழர் முஸ்லிம்களுக்கு
ஒதுக்கப்பட்டு இருப்பது ...

✶ இந்த அளவில் மாத்திரமே
நாட்டில் உரிமய்கள்
பகிரப்படும் என்பதற்காமோ?

✶ தமிழர் முஸ்லீம்கள்
தம்நாட்டில்
சமஉரிமய் கேட்டால் ...
ஆம்! அவர்கள்
ஓரங்கட்டப் படுவார்கள்
என்று உணர்த்தவோ ?
வாளுடன் சிங்கம் நடுவில் !



(Whither National Flag)

✶✶✶

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 45. பா-ர / ர்! அ - தம்!

* சாதி மத இன பேதச்
சதி வலய்கள் தாம் விரித்தே
மக்களய் அவற்றில் சதா
சிக்க வய்த்தே ... சுத்த
அரசியல் நடாத்துகின்ற
அயோக்கியர் மலிந்த நாடு
இந்தியா வெனக் காண்பீர்!




* பிச்சய் எடுத்தே
வீதியில் வாழும் ஏழய்
சிறுவர் சிறுமியர்
மலிந்த நாடும் - அதே
இந்தியா எனக் காண்பீர்!

* துர்நாற்றம் மணக்கும்
சேரிப் புலம் மலிந்த
சுந்தர நாடும் - அதே ஆம்!
இந்தியா எனக் காண்பீர்!



* சிவப்பு விளக்கு வீதி ...
வீடுகள் மலிந்த நாடும் - அதே
இந்தியா எனக் காண்பீர்!

* குடும்ப ஆட்சி
தொடராய் நடாத்தி
நாட்டய் நசித்துக்
குட்டிச் சுவராக்கியோரின் ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டியலும் அலங்கரிப்பே
அதே மகா
பாரதம் என்றே ஆம்! திட்டிக்
குட்டும் வெளிப்பாடே!
(ஆதாரம் : India's Brocken Tryst -
TAVLEEN SINGH - 2016)


***

## 46. சிவப்பதிகாரம் ?

* கூட்டு ஆட்சி
கூத்தாட்டத்தாலும்
நாட்டு மக்களுக்கு
நன்மை இல்லை என ...

* நாட்டு இளைஞர்
யுவதிகள் - இன்று
போட்டுப் பகிரங்கமாக ...
உடைத்து விட்டனராம்!

* சிவப்பு அதிகாரம் நம்
நாடு காணும் வரை ...
சிறுமை சீரழிவு
தொடர் கதையே
என்றும் அவர்கள் ...
தொடுத்து விட்டனரே?



* சபாஷ்! சபாஷ்!
"ஹிப்பிப்! ஹுரே!"
(Hippip! Hurrah!)
(Whither Dawn)

***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 47. 2016-02-11 !

✶ 1. பெண் :

இத்து னூண்டு
சோத்துலே அவ பாரு
எத்தனே வாட்டமடி ?
பருப்புக் கறியே
ஊத்தி யூத்தீச்
சொதப்பிச் சப்பீச்
சாப்பிடுறா !

✶ 2. பெண் :

காணாதவ வடி
கஞ்சியேக் கண்டு
கடக்கு கடக்கூண்ணூ
கடெவாயிலே வடிஞ்சி
ஒழுக ஒழுகக்
குடிக்கிற மாதிரி!

✶ 3. பெண் :


புது வீடு கட்டிக்
குடிபுக வந்தவுக பாவம்!
ஒரு சந்தோசத்துக் காக ...
ஓசியிலே குடுக்குற
விருந்து ஒபசாரத்தேச்
சீச்சீ! சாப்புட வந்துட்டு
ஏனுங்கடி ? இந்த
ஒதவாக்கரே பேச்சூ!

✶ 4. பெண் :

போற போற
எடத்துலே எல்லாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரு "பலாய்"
கழுவுறது தானேடீ!
நம்ம சீரழிஞ்ச தமுழுப்
பொண்டுக வுட்டுப்
பொழுது போக்கே ?



✶ 1 & 2 : நாங்க இங்கே
ஊரு "பலாய்"
கழுவலேடீ! - ஓமா!
உள்வீட்டு "பலாய்"
ஓதுறோம்!

✶ 5 பெண் : அடுத்தவுக வுட்டு
குண்டியே கழுவுற
அசிங்கப் புத்தீ
நம்மவுட்டுச் செல
பொண்டுக வுட்டுப்
பரம்பரெப் புத்திடீ!

இந்த ஊத்தெவாளிக்
கதய்யே விட்டுட்டுப்
பாயாச்த்தே நல்லா
வாழெலய்யிலே ஊத்தி
வழிச்சி நக்குறதே
விட்டுட்டு ஏண்டீ?
உள்வீட்டுப் "பலாய்!"
ஓதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✶ 3. ஏண்டீ ? இப்ப
ஒங்கவுட்டு
நாத்த - வாயி ...
அடச்சிப் போச்சீ!

(மாறு)

✶ தாத ரென்ற
நிலைமை மாறாத்
தத்து வத்தைப்
புகலு வோம் !
மாதர் தம்மை
இழிவு செய்யும்
மடமை யைய் ஆம் !
புகழுவோம்?


Mahakavi BHARATHI

(செந்தமிழ் நாட்டு மகாகவி
சி.சுப்பிரமணிய பாரதி
அய்யர் நினய்வாக -
1882.12.11 ↔ 13.09.1921)
(Tamil Feminine Tradition)
✶✶✶

## 48. காலூ ... ?

✶ தத்தக்கா புத்தக்கா
நாலு காலூ ...

✶ தானா நடந்தா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரெண்டு காலூ...

* முத்திப் பழுத்தா
மூணு காலூ ...



* மூச்சி நிண்ணா
முடக் காலூ!

(படிப்பறிவு இல்லாத
பாட்டி பாடிய
பழம் பாட்டு?)

(Natural Life Trail)

***

## 49. கசு குசூ ... ?

* "மாசி மகத்
திருவிழாவுக்கு
மூணு நாளுக்கு முன்னே
தலவாக் கொல்லே
சிறீ முத்துமாரி அம்மன்
கோயிலே ஒடய்ச்சீ
உள்ளே பூந்த திருடன் ...

* அம்மன் கழுத்துலே
அணிந்திருந்த
ஆறேழு பவன்
அசல் தங்கத் தாலியே
அறுத்து எடுத்ததோடே
அவளே விட்டு விடாமே ...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* அவ அணிந்திருந்த
அசல் ரவுக்கே
பட்டுச் சேலே ...
காலுலே அவ அணிஞ்சீ
ஜோராச் சொலிச்ச
கொலுசய்யும் கழட்டி ...

* அய்யோ! பவம் அவளே
அம்மணமா விட்டுட்டு
ஓடிப் பொயிட்டானாமே
படு பாவிப்பய! " - என்றே
முத்துமாரி அம்மனின்
அத்தனய் பக்தர்களும்
முக்கி முக்கி முனகி
மூக்காலே அழுகய்யே!



* "அவவுட்டு அசல்
தங்கத் தாலி
கால் கொலுசோடே
பட்டுச் சீலே ரவுக்கய்யே
காப்பாத்திக்கிற முடியாத
இவளே - இவனுக
இனியும் நம்புனா ...

* உருப்படு வானுகளா?" இண்ணா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பய "நக்கல்" அடிக்கிறான்!



✶ தாலி, கொலுசு
ரவுக்கே சேலய்யுடன் ...
பூசே பண்ணுற
அசல் செம்புச்செம்பு
கொடம் திருவிளக்கு
மணி தூபக்காலும் ...

✶ காணிக்கய்ப் பெட்டகமும்
களவு போனதாக ...
அறங்காவலரும் அய்யரும்
"போலீசுக்குப்" போயி
"கொம்பு லேண்டு" குடுத்தாகளாம் !



✶ விசாரணய்க்கு வந்த
"போலீசு ராலாமி" மாரும்
திருதிருண்ணு திருட்டு முழி
முழிக்கிற தேப் பாத்தா ...

✶ அத்தனே பேருக்கும்
அந்தத் திருட்டுலே
சம்மந்தம் இருக்கோண்ணூ
ஆளுகளுக்கு சமுசியம்?

✶ பஞ்ச ரத பவனியிலே
சிரி முத்துமாரி அம்மனே
அம்மணமாய் பாக்க
ஆசேப் பட்டுத்தான் ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தத் திருட்டுப் பசங்க
அப்புடி செஞ்சானுகளோண்ணூ
ஒரு போக்கிரிப் பய
புதுக் கரடி விடுறான்?

(மாறு)

✶ தேடியுனைச் சரணடைத்தேன்
தேச முத்து மாரி!
கேடதனை நீக்கிடுவாய்
கேட்டவரந் தருவாய்!



✶ பாடியுனைச் சரணடைந்தேன்
பாச மெல்லாம் களைவாய்!
கோடிநலஞ் செய்திடுவாய்
குறைகளெல்லாந் தீர்ப்பாய்!

- மகாகவி சி. சுப்பிரமணிய பாரதி ஐயர் -

(Plight of Goddess)

✶✶✶

## 50. கொள்ளய்?



✶ "வெள்ள அனர்த்தத்
துக்கு உள்ளே மூழ்கி
சந்தோச மகாச்
செத்து மடியாமல்
நாங்கள் அமய்த்த
அதிவேகப் பாதய் வழியில்
ஓடி உயிர் தப்பியது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவமானம் இல்லய்யா?'' - என்றே

முந்நாள் சனாதிபதி
கேள்விக் கணைய் !



✶ "அதிவேக மார்க்க
அமய்ப்பு! எனும் பேரில்
கோடி கோடியாகக்
கொள்ளைய் யடிக்கப்பட்ட
நாட்டு வருமானத்தின்
மோசடிக் கணக்கய்த்தான்
தேடிக் கண்டுபிடிக்க
முனய்வதாக'' ஆம்!
இந்நாள் சனாதிபதி
விளக்கம்!

(Embezzlement of Revenue)

✶✶✶

## 51. விடிவு ?



✶ சனநாயகம் எங்குமே
பண நாயகத்தய்ப்
பாதுகாக்கப் போய் - தனது
கனம் இழந்து
தவிப்பாமே!

✶ அதனால் தாம் -
சனநாயத்துடன்
சோசலிசம் எனும் பெயரய்ச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோடி சேர்த்தே
முகம் மூடிப்
போலி நாடகமே!


✶ விடிவு காண மக்கள்
விழித் தெழும் வரய் - இப்
போலி நாடகம்
முடிவின்றித் தொடரே!
(Whither Dawn)

✶✶✶

## 52. தேசிய கீதம் ?



✶ ஆனந்த சமரகோனின் - சிதய்த்த
சிங்கள தேசிய கீதத்தய்
தமிழிலும் மொழி பெயர்த்தே
விழிபிதுங்கப் பாடி ...
நாட்டில் விடிவு காண
தமிழ் அரசியல்வாதிகள்
தீவிர முயற்சியாமே?




✶ அச்சிங்கள தேசிய கீதத்தய்
பாலி, சமஸ்கிரத
அரபு மொழிகளுக்கு
மொழி பெயர்த்தே ...

✶ பன்சலய், கோவில்
பள்ளி "சர்ச்" களில் ...
பவ்த்த பிக்குமார், பிராமணர்
"மோதின்", "ஃபாதர்" மாரய்



இரவு பகலாய்க் கத்திக்
கதறி ஓதவிட்டே ...

✶ விவசாயி தொழிலாளரய்
அவற்றய் விளங்காது
காதுகிழியக் கேட்டுச்
சகித்து விட்டே ...



✶ கய்களில் -
அரிவாள், கத்தி, சுரண்டியுடன் ...
நெல்வயல், மரக்கறித்
தோட்டங்களுக்குச் சென்றே
அறுவடய் செய்தே ...
வீட்டுக்குக் கொண்டுவந்தே
நாட்டுக்கு விதியோகிக்கச்
சொல்லி ...



சிங்களம் தமிழ் ஆகிய
இரண்டு மொழிகளிலும்
ம(ா)க்கள் பிரதிநிதிகள்
எனப்படுவோரால் - உக்கல்
பாராளும் மன்றத்தில்
பகிரங்கப் படுத்தச் சொல்லிப்
பறய் சாற்றுவோம் ...

மக்கள் உணவுப் பாத்திரத்துடன்
சிக்கல் பாராளு மன்றுக்கே?

(Whither National Anthem)

✶✶✶

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் 60 : அரசியல் ...
வா/வியா-திகள்?
(கவிதய்கள்)

ஆசிரியர் : ஈவெராதாசன்
- கண்டி மு.ராமச்சந்ரன் -
(ரா.முத்துக்கருப்பன்)

முதல் பதிப்பு : 2016-07-05

வெளியீடு : 2016-08-10

வெளியிடுபவர் : M. RAAMACHANDHRAN
RAAMACHANDHRAAS
#2/1, RIVERDALE JUNCTION
ANNIWATHTHA
KANDY - 20,000
SHRI LANKA - 0094

***



ஆக்கங்கள் : 52
பக்கங்கள் : 72 + 04 = 76
பிரதி விலய் : ரூ.250/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org